2022 ஏப்ரல் 29]

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலுக்குவார்பட்டி ஊராட்சி, நிலக்கோட்டை பேரூராட்சியில் வத்தலகுண்டு வழியாக இயங்கி வருகின்ற பேருந்துகள், குன்னுவாரன்கோட்டை வழியாக இயக்கப்படும் பேருந்துகள் அனைத்துமே சாலைகள் சரியாக இல்லையென்ற காரணத்தினாலும், சரியான வருமானம் வரவில்லை என்கின்ற காரணத்தாலும் இந்தப் பேருந்துகள் இயக்கப்படுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி வரும்போது, அந்தச் சாலைகளையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே மக்களின் நலன் கருதி, சரியான நேரத்தில் சரியான வழித்தடத்தில் பேருந்துகள் செல்வதற்கு அரசு வழிவகை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய நிலக்கோட்டை தொகுதியில் எந்தெந்தப் பேருந்துகள் சரியான நேரத்தில் வழித்தடங்களில் வருவதில்லை என்பதை அவர் எழுத்துப்பூர்வமாகக் கொடுப்பாரேயானால், அதுகுறித்து உரிய அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

206—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***14477—திரு. P.R.G. அருண்குமார்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமாக அடிமனையோ, போதுமான நிதி வசதியோ இல்லாத காரணத்தால் புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் இருக்கையில் இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.*

முற்பகல் 10–45

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்ற பால் உற்பத்தியாளர்களுக்குக் கடந்த ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களால் மானியத்துடன்கூடிய தீவனம் வழங்கப்பட்டு வந்தது. இன்றைக்கு தீவனம் ஒரு மூட்டை 1,070 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதே தீவனம் கடந்த ஆட்சிக் காலத்திலே 770 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்சமயம் மானியம் 300 ரூபாய் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியாளர்களுடைய நலன் கருதி, பால் உற்பத்தியாளர் சங்கத்திலே இருக்கிற பால் உற்பத்தியாளர்களுக்கு அந்த மானியத்தை வழங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மானியத்தோடு மாட்டுத் தீவனங்களை முறையாக வழங்கிக்கொண்டிருக்கின்றோம். எந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் வழங்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பாரேயானால், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

207—

நிலத்தடி நீர்

***5303—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் உள்ள கிராமங்களின் நிலத்தடி நீரில் கந்தகப் பொருட்கள் கலப்பதைத் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில், நிலத்தடி நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டதில் கந்தகப் பொருட்களின் கலப்படம் இல்லையெனத் தெரிய வருகிறது. இருந்தாலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.